©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R.Dis. No. 197/2009
[Price: Rs. 4.00 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 29] CHENNAI, WEDNESDAY, JULY 25, 2012
Aadi 10, Thiruvalluvar Aandu–2043

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

*Pages.*

**வருவாய்த் துறை**

ஆட்சி எல்லை—கன்னியாகுமரி மாவட்டம், தற்போதுள்ள 81 வருவாய் கிராமங்களை பிரித்து அதனை சீரமைத்து கூடுதலாக 107 வருவாய் கிராமங்கள் உருவாக்குதல் .. .. .. .. 20–28

## NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய்த் துறை**

*தலைமை செயலகம், 2012 ஜூலை 25.*

**[ஆட்சி எல்லை – கன்னியாகுமரி மாவட்டம் தற்போதுள்ள 81 வருவாய் கிராமங்களை பிரித்து அதனை சீரமைத்து கூடுதலாக 107 வருவாய் கிராமங்கள் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.]**

No.II(1)/REV/15/2012.

*கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:–*

*[அரசாணை ((நிலை) எண் 227 வருவாய் [வ.நி1(1)]த் துறை, 18 ஜூன் 2012.]*

**படிக்கவும்:**

(1) அரசாணை (நிலை) எண் **878**, வருவாய்த் துறை, நாள் **3–9–1996.**

(2) **14–11–2011** அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு.

(3) அரசு கடித எண் **45850/வ.நி.1(1)/2011–1**, வருவாய், நாள் **21–11–2011.**

(4) மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி அவர்களின் கடித எண் அ**3/32659/2011**, நாள் **27–12–2011**

(5) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் கடித எண் அ**3/32659/2011**, நாள் **13–12–2011** மற்றும் **12–2–2012** (நிகரி மூலம்)

(6) முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித ந.க.பணி **6(1)/67193/11**, நாள் **14–3–2012.**

**ஆணை:**

*அரசாணை (நிலை எண் 227, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 18 ஜூன் 2012.*

**14–11–2011** அன்று நடந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பெரிய வருவாய் கிராமங்களைச் சீரமைத்து புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும் என அறிவித்துள்ளார்கள். இவ்வறிவிப்பு குறித்து முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் அறிக்கை கோரபட்டது.

**2.** முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சீரமைத்து புதியதாக **107** வருவாய் கிராமங்கள் உருவாக்குவது தொடர்பான அறிக்கையை கீழ்க்கண்டவாறு அனுப்பியுள்ளார்.

*(i)* கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது **81** வருவாய் கிராமங்கள் உள்ளன. ஒரு கிராமத்தில் இரண்டு பேரூராட்சி, இரண்டு ஊராட்சி பகுதிகளும், சில கிராமங்களில் நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளும் கலந்து உள்ளன. மொத்தம் **154** உள்ளாட்சி அமைப்புகளுக்கு (**55** பேரூராட்சிகள், **95** ஊராட்சிகள் மற்றும் **4** நகராட்சிகள்) இணையாக **81** வருவாய் கிராமங்களே உள்ளன. மேலும், இம்மாவட்டத்தின் மொத்த பரப்பளவு **1684** ச.கி.மீ. ஆக இருப்பினும் மக்கள் அடர்த்தி **1106** ஆக உள்ளது. மேலும் பரப்பளவில் சிறிய மாவட்டங்களான பெரம்பலூர் (**1750** ச.கி.மீ) மற்றும் அரியலூர் (**1944** ச.கி.மீ) மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் மக்கள் அடர்த்தி மிகக் குறைவாக இருப்பினும் இம்மாவட்டங்களில் முறையே **152** மற்றும் **195** வருவாய் கிராமங்கள் உள்ளன.

*(ii)* கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிராமங்கள் மலை மற்றும் மலைசார்ந்தப் பகுதிகள், கடல் மற்றும் கடல்சார்ந்தப் பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும், பரப்பளவு அதிகம் கொண்டதாகவும் உள்ளன. தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களில் உள்ள வருவாய் கிராமங்களை ஒப்பிடும் பொழுது, இம்மாவட்டத்தில் உள்ள வருவாய் கிராமங்களின் பரப்பளவில் மிகவும் அதிகமானதாகவும், பல வருவாய் கிராமங்களில் மக்கள்தொகை **30,000** லிருந்து **1** லட்சத்திற்கும் மேற்பட்டதாகவும் உள்ளது. இதனால் மக்கள் கிராம நிருவாக அலுவலகத்தை நேரில் அணுகுவதற்கு அதிக தூரம் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது. மேலும், கிராம நிருவாக அலுவலர்கள் தங்கள் கிராமத்திலுள்ள பகுதிகளுக்கு விசாரணை மற்றும் வரி வசூலுக்காக செல்லும்போது கிராமத்தின் பரப்பளவு மிகவும் அதிகமாக இருப்பதால், தங்கள் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பகுதிகளை கண்காணிப்பதில் சிரமங்களும், கால தாமதமும் ஏற்படுகிறது. அரசின் நலத்திட்டங்கள் மற்றும் மக்களின் மிகவும் அத்தியாவசிய தேவையான சாதி/வருமானம்/இருப்பிடம் முதலான சான்றுகள், பட்டா மாறுதல் மற்றும் •உட்பிரிவுகள் முதலான இனங்கள் மக்களிடையே காலதாமதம் இன்றி சென்றடைய மேற்படி கிராமங்களின் ஆளுகை எல்லைகள் சுருக்கமான அளவில் இருப்பது, அரசின் திட்டப் பணியை நல்லமுறையில் செய்ய பெரிதும் வசதியாக இருக்கும்.

**3.** கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக மக்கள்தொகை கொண்ட கிராமங்கள், அதிக பரப்பளவு கொண்ட கிராமங்கள், அதிகமான மலைப்பகுதிகளைக் கொண்ட கிராமங்கள் மற்றும் கடற்கரை பகுதியை அதிகமாக கொண்ட கிராமங்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வினங்களில் ஊராட்சி, பேரூராட்சி ஆகிய பகுதிகள் கலந்து இருப்பினும், அவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் தற்போதுள்ள வருவாய் கிராமங்களின் எல்லைகளில் எவ்வித பெரிய மாறுதல்களும் ஏற்படா வண்ணமும், இம்மாவட்டத்தில் மறுநில அளவை இதுவரை நடைபெறாத நிலையில் வருவாய் கிராமங்களின் எல்லைகளை மாற்றுவதால் புலஎண்களில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாலும், மறு நிலஅளவை செய்ய வேண்டியதன் அவசியத்தை குறைக்கும் முகமாகவும், புதிய கிராமங்களை பிரித்து பெரிய வருவய் கிராமங்களை தோற்றுவிக்க கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

**4.** மேலும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் திருத்திய கருத்துருவின் அடிப்படையில் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாகஆணையர் கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போதுள்ள இரண்டு வருவாய் கோட்டங்களுக்குட்பட்ட நான்கு வட்டங்களில், 81 வருவாய் கிராமங்கள் உள்ளன. மேற்படி 81 வருவாய் கிராமங்களை சீரமைத்து புதியதாக 107 வருவாய் கிராமங்களுடன் மொத்தம் 188 வருவாய் கிராமங்கள் இயன்றவரை கீழ்க்கண்ட காரணிகளின் (Norms) அடிப்படையில் உருவாக்கலாம் என தெரிவித்துள்ளார்.

* தற்போது இருக்கும் வருவாய் கிராமங்களின் எல்லைகளில் எவ்வித மாறுதல்களும் ஏற்படாத வகையில் கிராமங்களைப் பிரிப்பது.

* புதிய வருவாய் கிராமங்கள் ஏற்படுத்தும்பொழுது கண்டங்கள் அவற்றிலுள்ள புல எண்கள் மாறுபடாமல் இருப்பது.

* புதிய வருவாய் கிராமங்களுக்கு தற்போது இருக்கும் வருவாய் கிராமம் பெயரையோ அல்லது புதிய வருவாய் கிராமத்தில் உள்ளடங்கிய உள்ளாட்சி அமைப்புகளின் பெயரையோ மட்டும் பயன்படுத்துவது.

* உள்ளாட்சி அமைப்புகளுக்கு இணையான வருவாய் கிராமங்கள் உருவாக்குவது.

* புதிய குறுவட்டங்கள் (Firka) உருவாகாமல் இயங்கி வரும் குறுவட்டங்களுக்கு உள்ளாகவே புதிய வருவாய் கிராமங்களை பிரிப்பது.

* மக்கள் அடர்த்தி, மக்கள் தொகை மற்றும் நில பரப்பு ஆகியவற்றை தமிழகத்தின் சராசரி மக்கள் தொகை மற்றும் நில பரப்பளவிற்கு ஏதுவாக பிரிப்பது.

**5.** புதியதாக தோற்றுவிக்கப்படும் 107 வருவாய் கிராமங்களுக்கு 107 கிராம நிருவாக அலுவலர் பணியிடமும், 107 கிராம உதவியாளர் பணியிடமும் வழங்க அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.** புதியதாக 107 வருவாய் கிராமங்கள் உருவாக்குதல் தொடர்பாக ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினங்கள் தோராயமாக கீழ்க்கண்டவாறு ஏற்படும் என்ற விவரத்தையும் முதன்மைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

**தொடரும் செலவினம்:**

| வ.எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை | அடிப்படைப்படி+தர ஊதியம் | அக விலைப்படி | வீட்டு வாடகைப்படி | மருத்துவப்படி | நிரந்தரப் பயணப்படி | 1 நபருக்கு 1 மாதத்திற்கான உத்தேச செலவினம் | 107 நபருக்கு 1 மாதத்திற்கான உத்தேச செலவினம் | 107 நபருக்கு 1 வருடத்திற்கான உத்தேச செலவினம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 | கிராம நிர்வாக அலுவலர் | 107 | 5200+2400 | 4408 | 760 | 100 | 400 | 13,268 | 14,19,676 | 1,70,36,112 |
| | கிராம உதவியாளர் | 107 | 3500+800 | 2494 | 300 | 100 | 120 | 7,314 | 7,82,598 | 93,91,176 |
| | | | 11,900 | 6902 | 1060 | 200 | 520 | 20,582 | 22,02,274 | 2,64,27,288 |
| | | | | | | | | மின் கட்டணம் (ரூ.300X107X12)= | | 3,85,200 |
| | | | | | | | | | மொத்தம் | 2,68,12,488 |

**தொடரா செலவினம்:**

| வ.எண். | விவரம் | எண்ணிக்கை | தொகை (ஒன்றிற்கு) | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அலுவலக கட்டிடம் | 107 | 5,00,000 | 5,35,00,000 |
| 2 | மேசை | 2X107 | 5,000 | 10,70,000 |
| 3 | நாற்காலி | 2X107 | 1,500 | 3,21,000 |
| 4 | மர அலமாரி | 1X107 | 10,000 | 10,70,000 |
| 5 | பெஞ்ச் | 1X107 | 1,000 | 1,07,000 |

7. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோரின் கருத்துருக்களை நன்கு பரிசீலித்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

*(i)* கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நகர்கோவில் வருவாய் கோட்டத்திற்குட்பட்ட அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்கள் மற்றும் பத்மநாபபுரம் வருவாய் கோட்டத்திற்குட்பட்ட கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்களின் கட்டுப்பாட்டில் தற்போதுள்ள 81 வருவாய் கிராமங்களை பிரித்து சீரமைத்து கூடுதலாக 107 வருவாய் கிராமங்களை உருவாக்கி மொத்தம் 188 வருவாய் கிராமங்கள் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அடிப்படையில் இணைப்பு—1 இல் உள்ளவாறு பிரிக்கப்படுகிறது.

*(ii)* கன்னியாகுமரி மாவட்டத்தில் கூடுதலாக 107 வருவாய் கிராமங்கள் உருவாக்குவதால் இந்த வருவாய் கிராமங்களில் பணிபுரிய 107 கிராம நிர்வாக அலுவலர் பணியிடமும் மற்றும் 107 கிராம உதவியாளர் பணியிடமும் இணைப்பு II—ல் உள்ளபடி புதியதாக தோற்றுவிக்கப்படுகிறது.

*(iii)* கன்னியாகுமரி மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்படவுள்ள 107 வருவாய் கிராமங்களில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.5,35,00,000/—க்கு (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிருவாக அனுமதியும் ரூ. 5,35,00,000/—க்கு (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் வழங்கப்படுகிறது.

*(iv)* கன்னியாகுமரி மாவட்டத்தில் கூடுதலாக தோற்றுவிக்கப்படவுள்ள 107 கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் 107 கிராம உதவியாளர்களுக்குத் தேவையான தளவாடங்கள் (Furniture) வழங்க தொடராச் செலவினமாக ரூ. 25,68,000/—க்கு (ரூபாய் இருப்பதைந்து இலட்சத்து அறுபத்தெட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

*(v)* கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கனவே 03—09—1996 அன்று 26 பெரிய வருவாய் கிராமங்களைப் பிரித்து புதியதாக 26 வருவாய் கிராமங்களுடன் மொத்தம் 52 வருவாய் கிராமங்கள் உருவாக்கியும் மற்றும் புதியதாக 26 கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவித்தும் பிறப்பிக்கப்பட்ட பார்வை 1 இல் கண்டுள்ள அரசாணை மற்றும் மேற்படி அரசாணையை வெளியிட்ட கன்னியாகுமரி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 18, நாள் 13—11—1996 ரத்து செய்யப்படுகிறது;

*(vi)* மேலே பார்வை 5 இல் படிக்கப்பட்ட கடிதத்தில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்டவாறு கிராம எல்லைகளை (Village boundaries) வரையறை செய்து, உரிய வரைவு அறிவிக்கையை அரசிதழில் வெளியிட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 7—இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**(அ) 01 01 பணியாளர் சம்பளங்கள்**

2053 00 மாவட்ட நிருவாகம் — 094 ஏனைய பணியாளரமைப்பு—1 திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளரமைப்புகள் — 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

**(ஆ) 05 05 அறைகலன் ரூ. 25,68,000/—**

05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்

(த.தொ.கு. 2053 00 094 AB 0559)

**(இ) 05 அலுவலக செலவுகள் மற்றும் 03 மின் கட்டணங்கள் ரூ. 3,85,200**

(த.தொ.கு. 2053 00 094 AB 0531)

**(ஈ) அலுவலகக் கட்டடம் ரூ.5,35,00,000**

4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு — 01 அலுவலகக் கட்டடங்கள் — 051 கட்டுமானம் — பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் — II மாநிலத் திட்டம் — நிலவரி — 16 பெரும் பணிகள்

(த.தொ.கு: 4059—01—051 — JC — 1609)

9. மேலே பத்தி 7—ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப் பணியாகும் (New Services). இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை—5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய வரைவு விளக்கக் குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது.I) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**10.** மேலே பத்தி 7–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**11.** இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் **34396**/வருவாய்/**2012**, நாள் **18–06–2012** இசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் **436** (நானூற்று முப்பத்து ஆறு) உடனும் வெளியிடப்படுகிறது.

**ரமேஷ்ராம் மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**இணைப்பு – I**

*அரசாணை (நிலை) எண் 227, வருவாய்த் துறை, நாள் 18 ஜூன் 2012*

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள **81** வருவாய் கிராமங்களைப் பிரித்து **2012** ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் **11** ஆம் நாளிலிருந்து கீழ்காணப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வருவாய் கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாக கொண்டு செயல்படும்.

| *வ.எண்.* | *வட்டம்* | *குறுவட்டத்தின் பெயர்* | *வருவாய் கிராம எண்.* | *வருவாய் கிராமத்தின் பெயர்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| | | **I நாகர்கோவில் வட்டம்** | | |
| 1 | அகஸ்தீஸ்வரம் | கன்னியாகுமரி | 1 | கன்னியாகுமரி |
| | | | 21 | லீபுரம் |
| | | | 2 | அகஸ்தீஸ்வரம் |
| | | | 22 | கோவளம் |
| | | | 23 | தெற்கு தாமரைகுளம் |
| | | | 17 | அழகப்பபுரம் |
| | | | 40 | அஞ்சுகிராமம் |
| | | | 18 | கொட்டாரம் (கிழக்கு) |
| | | | 41 | கொட்டாரம் (மேற்கு) |
| | | நாகர்கோவில் | 12 | வடிவீஸ்வரம் (கிழக்கு) |
| | | | 30 | வடிவீஸ்வரம் (வடக்கு) |
| | | | 31 | வடிவீஸ்வரம் (தெற்கு) |
| | | | 32 | தேரேகால்புதூர் |
| | | | 13 | நாகர்கோவில் (வடக்கு) |
| | | | 33 | நாகர்கோவில் (தெற்கு) |
| | | | 34 | கன்னியாகுளம் |
| | | | 35 | புத்தேரி |
| | | | 14 | வடசேரி (கிழக்கு) |
| | | | 36 | வடசேரி (மேற்கு) |
| | | | 37 | வடசேரி (தெற்கு) |
| | | | 15 | நீண்டகரை – A (மேற்கு) |
| | | | 38 | நீண்டகரை – A (கிழக்கு) |
| | | | 20 | வேம்பனூர் (மேற்கு) |
| | | | 43 | வேம்பனூர் (கிழக்கு) |

| வ.எண். | வட்டம் | குறுவட்டத்தின் பெயர் | "வருவாய் கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அகஸ்தீஸ்வரம் | சுசீந்திரம் | 3 | வடக்கு தாமரைகுளம் |
| | | | 4 | குலசேகரபுரம் |
| | | | 24 | மயிலாடி |
| | | | 5 | மருங்கூர் |
| | | | 25 | நல்லூர் |
| | | | 6 | தேரூர் |
| | | | 26 | இராமபுரம் |
| | | | 7 | இரவிபுதூர் |
| | | | 8 | சுசீந்திரம் |
| | | இராஜாக்கமங்கலம் | 9 | பறக்கை |
| | | | 10 | தெங்கம்புதூர் |
| | | | 27 | புத்தளம் |
| | | | 11 | தர்மபுரம் (வடக்கு) |
| | | | 28 | தர்மபுரம் (தெற்கு) |
| | | | 29 | தர்மபுரம் (கிழக்கு) |
| | | | 16 | நீண்டகரை – பி |
| | | | 39 | இராஜாக்கமங்கலம் |
| | | | 19 | மதுசூதனபுரம் (வடக்கு) |
| | | | 42 | மதுசூதனபுரம் (தெற்கு) |
| 2 | தோவாளை | அழகியபாண்டியபுரம் | 1 | அருமநல்லூர் |
| | | | 2 | தடிக்காரன்கோணம் |
| | | | 3 | ஞாலம் |
| | | | 4 | தெரிசனங்கோப்பு |
| | | | 5 | அழகியபாண்டியபுரம் |
| | | | 6 | காட்டுப்புதூர் |
| | | | 7 | அனந்தபுரம் |
| | | | 8 | திடல் |
| | | பூதப்பாண்டி | 9 | பூதப்பாண்டி |
| | | | 10 | சிறமடம் |
| | | | 11 | ஈசாந்திமங்கலம் (வடக்கு) |
| | | | 12 | ஈசாந்திமங்கலம் (தெற்கு) |
| | | | 13 | தாழக்குடி |
| | | | 14 | இறச்சகுளம் |
| | | | 15 | நாவல்காடு |
| | | தோவாளை | 16 | திருப்பதிசாரம் |
| | | | 17 | செண்பகராமன்புதூர் |
| | | | 18 | மாதவலாயம் |
| | | | 19 | சண்முகபுரம் |
| | | | 20 | வீரமார்த்தாண்டன்புதூர் |
| | | | 21 | தோவாளை |
| | | | 22 | ஆரல்வாய்மொழி (வடக்கு) |

| வ.எண். | வட்டம் | குறுவட்டத்தின் பெயர் | வருவாய் கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | தோவாளை | 23 | ஆரல்வாய்மொழி (தெற்கு) |
| | | | 24 | குமாரபுரம் |
| | | **II. பத்மனாபபுரம் கோட்டம்** | | |
| 3 | கல்குளம் | திருவிதாங்கோடு | 1 | கப்பியறை எ |
| | | | 26 | கப்பியறை பி |
| | | | 2 | வாழ்வச்சகோஷ்டம் எ |
| | | | 27 | வாழ்வச்சகோஷ்டம் பி |
| | | | 28 | மருதூர்குறிச்சி |
| | | | 13 | இரணியல் |
| | | | 43 | ஆத்திவிளை |
| | | | 44 | நுள்ளிவிளை எ |
| | | | 45 | நுள்ளிவிளை பி |
| | | | 18 | திருவிதாங்கோடு |
| | | | 56 | முளகுமூடு |
| | | | 57 | திக்கணங்கோடு |
| | | குருந்தன்கோடு | 12 | ஆளூர் எ |
| | | | 42 | ஆளூர் பி |
| | | | 14 | தலக்குளம் |
| | | | 46 | திங்கள் நகர் |
| | | | 47 | கக்கோட்டுதலை |
| | | | 23 | வில்லுக்குறி எ |
| | | | 62 | வில்லுக்குறி பி |
| | | | 63 | வில்லுக்குறி சி |
| | | | 24 | குருந்தன்கோடு எ |
| | | | 64 | குருந்தன்கோடு பி |
| | | குளச்சல் | 15 | கடியப்பட்டணம் |
| | | | 48 | வெள்ளிச்சந்தை எ |
| | | | 49 | வெள்ளிச்சந்தை பி |
| | | | 50 | வெள்ளிமலை |
| | | | 16 | மணவாளக்குறிச்சி |
| | | | 51 | மண்டைக்காடு |
| | | | 17 | குளச்சல் எ |
| | | | 52 | குளச்சல் பி |
| | | | 53 | சைமன் காலனி |
| | | | 54 | ரீத்தாபுரம் |
| | | | 55 | செம்பொன்விளை |
| | | | 25 | லெட்சுமிபுரம் |
| | | | 65 | நெய்யூர் |
| | | | 66 | கல்லுக்கூட்டம் |

| வ.எண். | வட்டம் | குறுவட்டத்தின் பெயர் | வருவாய் கிராம எண். | வருவாய் கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | தக்கலை | 4 | தக்கலை |
| | | | 31 | பத்மனாபபுரம் எ |
| | | | 32 | பத்மனாபபுரம் பி |
| | | | 33 | முத்தலக்குறிச்சி |
| | | | 5 | கல்குளம் |
| | | | 34 | சடையமங்கலம் |
| | | | 6 | கோதநல்லூர் |
| | | | 35 | குமாரபுரம் |
| | | | 20 | வேளிமலை |
| | | குலசேகரம் | 38 | குலசேகரம் எ |
| | | | 39 | குலசேகரம் பி |
| | | | 10 | திற்பரப்பு |
| | | | 40 | பேச்சிப்பாறை |
| | | | 11 | பொன்மனை எ |
| | | | 41 | பொன்மனை பி |
| | | | 21 | தும்பக்கோடு எ |
| | | | 60 | தும்பக்கோடு பி |
| | | | 22 | சுருளக்கோடு |
| | | | 61 | பெருஞ்சாணி |
| | | திருவட்டார் | 3 | ஆற்றூர் |
| | | | 29 | செருகோல் |
| | | | 30 | ஏற்றக்கோடு |
| | | | 7 | மேக்கோடு |
| | | | 36 | குமரன்குடி |
| | | | 8 | அருவிக்கரை |
| | | | 37 | அயக்கோடு |
| | | | 9 | திருவட்டார் |
| | | | 19 | வீயன்னூர் எ |
| | | | 58 | வீயன்னூர் பி |
| | | | 59 | கண்ணனூர் |
| 4 | விளவங்கோடு | பைங்குளம் | 1 | கொல்லங்கோடு எ |
| | | | 24 | கொல்லங்கோடு பி |
| | | | 25 | சூழால் |
| | | | 2 | ஏழுதேசம் எ |
| | | | 26 | ஏழுதேசம் பி |
| | | | 27 | ஏழுதேசம் சி |
| | | | 3 | பைங்குளம் |
| | | | 28 | தேங்காய்பட்டணம் |

| *வ.எண்.* | *வட்டம்* | *குறுவட்டத்தின் பெயர்* | *"வருவாய் கிராம எண்.* | *வருவாய் கிராமத்தின் பெயர்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 4 | விளவங்கோடு | பைங்குளம் | 4 | ஆறுதேசம் |
| | | | 29 | முஞ்சிறை |
| | | | 5 | மெதுகும்பல் |
| | | | 30 | அடைக்காகுழி |
| | | | 19 | குளப்புறம் |
| | | விளவங்கோடு | 6 | குன்னத்தூர் |
| | | | 31 | விளாத்துறை |
| | | | 7 | நல்லூர் |
| | | | 9 | விளவங்கோடு |
| | | | 34 | களியக்காவிளை |
| | | | 35 | குளித்துறை நகரம் |
| | | | 38 | மஞ்சாலுமூடு |
| | | | 18 | நட்டாலம் எ |
| | | | 47 | உண்ணாமலைக்கடை |
| | | | 48 | நட்டாலம் பி |
| | | | 49 | கொல்லஞ்சி |
| | | | 50 | அதங்கோடு |
| | | | 20 | அண்டுகோடு ஏ |
| | | | 51 | அண்டுகோடு பி |
| | | | 21 | வெள்ளாங்கோடு |
| | | அருமனை | 37 | தேவிகோடு |
| | | | 12 | அருமனை |
| | | | 13 | களியல் |
| | | | 39 | கடையால் |
| | | | 52 | முழக்கோடு |
| | | | 53 | சிதறால் |
| | | | 22 | மாங்கோடு |
| | | | 54 | புலியூர்சாலை |
| | | இடைக்கோடு | 8 | பாகோடு எ |
| | | | 32 | மருதங்கோடு |
| | | | 33 | பாகோடு பி |
| | | | 10 | பளுகல் |
| | | | 36 | மலையடி |
| | | | 11 | இடைக்கோடு |
| | | மிடாலம் | 14 | கீழ்மிடாலம் எ |
| | | | 40 | கீழ்மிடாலம் பி |
| | | | 15 | மிடாலம் எ |
| | | | 41 | மிடாலம் பி |

| *வ.எண்.* | *வட்டம்* | *குறுவட்டத்தின் பெயர்* | *வருவாய் கிராம எண்.* | *வருவாய் கிராமத்தின் பெயர்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| | | மிடாலம் | 42 | கருங்கல் |
| | | | 43 | மத்திகோடு |
| | | | 16 | கீழ்குளம் எ |
| | | | 44 | இணையம் புத்தன்துறை |
| | | | 45 | கீழ்குளம் பி |
| | | | 17 | கிள்ளியூர் எ |
| | | | 46 | கிள்ளியூர் பி |
| | | | 23 | பாலூர் |
| | | | 55 | முள்ளங்கினாவிளை |

தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 81 வருவாய் கிராமங்கள் பிரிவினைக்கு பின் 188 வருவாய் கிராமங்களாக பிரிக்கப்படும். புதிய வருவாய் கிராமங்கள் பிரிவினைக்கு பின் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களால் கையாளப்படும் அதிகாரங்கள் 2012 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 11 ஆம் நாளிலிருந்து பிரிவினைக்கு பிந்தைய கிராம நிர்வாக அலுவலர்களால் கையாளப்படும்.

**இணைப்பு—II**

*[அரசாணை (நிலை) எண் 227, வருவாய்த் துறை, நாள் : 18 ஜூன் 2012.]*

**தொடரும் செலவினம்**

| *வ.எண்.* | *பதவியின் பெயர்* | *எண்ணிக்கை* | *ஊதிய விகிதம் + தர ஊதியம்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | கிராம நிர்வாக அலுவலர் | 107 | 5200—20200+ரூ.2400 |
| | கிராம உதவியாளர் | 107 | 3500—6000+ரூ.600 |

**இணைப்பு—III**

*[அரசாணை (நிலை) எண் 227, வருவாய்த் துறை, நாள் : 18 ஜூன் 2012.]*

**தொடரா செலவினம்**

| *வ.எண்.* | *விவரம்* | *எண்ணிக்கை* | *தொகை (ஒன்றிற்கு)* | *மொத்த தொகை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | அலுவலக கட்டிடம் | 107 | 5,00,000 | 5,35,00,000 |
| 2 | மேசை | 2x107 | 5,000 | 10,70,000 |
| 3 | நாற்காலி | 2x107 | 1,500 | 3,21,000 |
| 4 | மர அலமாரி | 1x107 | 10,000 | 10,70,000 |
| 5 | பெஞ்ச் | 1x107 | 1,000 | 1,07,000 |
| | | | **மொத்தம் ..** | **5,60,68,000** |

**ரமேஷ்ராம் மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU